248.

"உழவர் நாடு"

மாதப் பத்திரிகை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
OCT 1949
MADRAS

கள்ளிக்குடி ரெட்டி மகாஜன சங்கத் தலைவரும்
இராமநாதபுரம் ஜில்லா போர்டு மெம்பருமான
திரு S. S. சங்கம ரெட்டியார் அவர்கள்

வெளியிடுபவர் & ஆசிரியர்: N. S. அழகர்சாமி,
முத்துராமலிங்கபுரம்.
கல்லூரணி P. O.

Regd No. M. 5478   1949.   விலை 2 அணா.

பதிப்பகம்:
ஸ்ரீ சத்தி பிரஸ், அருப்புக்கோட்டை

10 OCT 1949
MADRAS

★ "உழவர் நாடு" ★

மாதப் பத்திரிகை.

ஆசிரியர்: N. S. அழகர்சாமி.

முத்துராமலிங்கபுரம், கல்லூரணி P. O.

உழவு 1	விரோதி ஸ்ரீ புரட்டாசி மீ	விளைவு 4.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின் செல்பவர்." (குறள்)

தேர்தலுக்குப் பின் :: :: செய்யவேண்டியதென்ன?

சமீபத்தில் நம் மாகாணத்தில் நடந்த ஜில்லா போர்டு தேர்தலில் பொதுவாக காங்கிரஸ் ஜெயபேரிகை கொட்டிற்று என்ற போதிலும், குறிப்பாக எதிர்பார்த்த வெற்றி இல்லை என்றுதான் சொல்லவேண்டும். காங்கிரஸை எதிர்த்து வெற்றி பெற்ற சுயேச்சை அங்கத்தினர்களில், பெரும்பான்மையோர் பழைய காங்கிரஸ்காரர்களேயாகும். அவர்கள் இன்றும் தங்களை காங்கிரஸ்காரர்கள்தான் என்று சொல்லிக்கொண்டும் வெளிப்படையாக ஒப்புக்கொண்டு வருகின்றனர். ஆனால் ஒழுங்கு, கட்டுப்பாடு, ஆகியவைகளின்று வெகுதூரம் சென்று விட்டனரே என்று அங்கலாயிக்கலாம். பரவாயில்லை; மாற்றுக்கட்சியில் சேராமல் அவர்களும் மகாத்மாவின் பெயரையேச் சொல்லி, ஓட்டுப்பெற்று வெற்றி பெற்றிருக்கின்றனர். சென்றதை மறந்து, செய்ய வேண்டிய ஆக்கவேலைகளுக்காக, காங்கிரஸ் தலைமைப் பீடம் சுயேச்சை அங்கத்தினர்கள் அனைவரையும் ஒன்று கூட்டி, இன்றைய நிலைமையை விளக்கி, மீண்டும் அவர்களை கட்சியில் சேர்க்க முயற்சி செய்யவேண்டும்.

தாலுகா, ஜில்லா கமிட்டி மெம்பர்கள் எப்போ, எங்கே, எந்த மந்திரியார் வருவார், வருவார் என்று எதிர்பார்த்து, எங்கி அவர்களின் ஓரத்தில் உட்கார்ந்து பவனி வந்தால், பாவம் தீரும்

என்று எண்ணுமல்; கிராமம் கிராமமாகச் சென்று அவர்களின் தேவைகள் என்ன என்று கேட்டு, தேவைகளில் என்ன பூர்த்தி யாகியிருக்கிறது? என்ன பாக்கியிருக்கிறது, அதற்குக் காங்கிரஸ் மகா சபை என்ன செய்திருக்கிறது. இன்னும் என்ன செய்யவேண்டும், மந்திரி சபைக்கு மக்கள் ஏன் ஒத்தாசைசெய்ய வேண்டும்? என்பதை விளக்கி மிகதீவிரமான பிரச்சாரம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்

பழைய காங்கிரஸ் காரர்களாச்சே, அவர்களை எப்படி கிராம கமிட்டிகளிலிருந்து வெளியேற்றுவது என்று எண்ணுமல், இன்றைய கிராம செல்வாக்குள்ளவர்களைக் கொண்டு, கமிட்டிகளை திருத்தி அமைக்கவேண்டும். கிராம, தாலுகா, ஜில்லா, மாகாண காங்கிரஸ் கமிட்டிகளில் அங்கம் வகிப்பவர்கள், கட்டாயமாக கிராமபஞ்சாயத்திலோ, ஜில்லா போர்டிலோ, சட்டசபைகளிலோ அங்கம் வகிக்க இடம் தரக்கூடாது. அவ்விதம் யாராகிலும் இருந்தால், இப்பொழுதே உடனடியாக அவர்களை ராஜிநாமாச் செய்ய வற்புறுத்த வேண்டும்.

அவ்விதம் அவர்கள் செய்யாவிட்டால் ஷடி நபர்களின் பேரில் ஒழுங்கு நடபடிக்கை எடுத்து விலக்கிவிடவேண்டும்.

இதற்கு முன் மாதிரியாக, மதிப்புக்குரிய நம் மாகாண கமிட்டித் தலைவர் திரு. காமராஜ் அவர்கள், ஒன்று மாகாணத் கமிட்டித் தலைமைப் பதவியை ராஜிநாமாச் செய்யவேண்டும். அல்லது M. L. A. பதவியை ராஜிநாமாச் செய்யவேண்டும். காங்கிரஸ் கமிட்டிகளில் அங்கம் வகிப்பவர்கள், 4 அணு காங்கிரஸ் அங்கம் ஆனவர்களுக்குத்தான் எல்லாவகை நன்மைகளையும் செய்யவேண்டும் என்று எண்ணுமல், ஒரு அரசியல் கட்சியும் சேராத நூற்றுக்கு எழுபது பேருக்கு மேற்பட்டு இருக்கும் மக்களுக்கும் உதவிபுரிய ஆசைப்படவேண்டும்; நினைக்கவேண்டும் அப்பேர்ப்பட்டவர்களின் பலம்தான் தேர்தலில் வெற்றி, தோல் விக்குக்குக் காரணமாக இருக்கின்றது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

ஸ்தல M. L. A; M. L. C க்கள் தவரான பாதையில் நடக்கின்றனர் அல்லது சரியானபடி தங்களைத் தேர்ந்தெடுத்தவர்களுக்கு சேவை செய்யவில்லை என்று தெரிந்தால் தைரியமாக பொதுக்கூட்டங்களில் கண்டித்துப் பேசி, ஒன்று அவர்களை திருத்தவேண்டும் அல்லது கட்சியிலிருந்து ஒழித்துக்கட்டவேண்டும் மிக மிக அவசிமான, அவசரமான மேலே சொன்ன காரியங்களை செய்து முடிப்போமேயானல், காங்கிரஸ் ஸ்தாபனம் மீண்டும் புனிதப்பட்டு காந்தீயமும் வளர்க்கப்பட்டு, அடுத்துவரும் எல்லா தேர்தல்களிலும் வெற்றி திக்கெட்டும் கிட்டும் என்பதில் ஐயமில்லை அவனசெய்ய காங்கிரஸ் அதிகாரப்பீடம் முயற்சிக்குமா?

வாழ்க தாய் நாடு.

நம் நாட்டு அறுகம் புல்லும்
அருமையான மருந்து.

அறுகம்புல்லை துளிராக மூன்று அல்லது நான்கு இலை உள்ளதாக எடுத்துவந்து அரைத்து பசுவின் பாலில் கரைத்துக் குடிக்க, மூலக்கடுப்பு, இரத்தம் விழுதல், மூல மூளை தீரும். தேக காங்கை யும் தணியும். நல்லெண்ணை, புகையிலை, புளி, மிளகாய், காரம் கூடாது.

திரு K. A. P. விசுவநாதம், திருச்சிராப்பள்ளி.

அறிவுக்கு உணவு.

பறங்கிச் செடிக்குப் பறங்கி விதையும், பாகைச் செடிக்கு பாகை விதையும் வேண்டும் என்பது எல்லோரும் அறிந்ததே. மற்ற எல்லாச்செடிகளும் அதன் தன் வித்திலிருந்தே முளைக்கின்றன. "விதை ஒன்று போட சுரை ஒன்று முளைக்கும்"? என்ற பழமொழியும் இதை வற்புறுத்துகிறது.

ஆனால், பகை என்ற செடி, பகை என்ற 'விதையிலிருந்து முளைப்பதில்லை. நட்புஎன்ற விதையிலிருந்துதான் விளைந்து வருகிறது. நட்பு என்ற விதையின்றி பகை என்ற செடி முளைப்பதில்லை என்று துணிந்து கூறலாம். பாதையில் சென்றுகொண்டிருக்கும் பலரைப்பாருங்கள், அவர்களில் எவரேனும் உங்களுக்குப் பகையா? இல்லை! ஏனெனில் அவர்களில் எவருடனும் நீங்கள் நட்புக் கொண்டதில்லை. ஆகவே பகையில்லை.

உங்களுக்குப் பகையாய் இருக்கும் சிலரை எண்ணிப் பாருங்கள். அவர்களோடு நீங்கள் ஒருகாலத்தில் கொண்டிருந்த நட்பு உங்களுக்கு நன்கு விளங்கும். இதிலிருந்து பகைக்கு விதை நட்பு என்று நன்கு விளக்குகிறதா?

திரு K. A. P. விசுவநாதம், திருச்சிராப்பள்ளி.

6-ம் பக்கத் தொடர்ச்சி....

உழவர் விழிப்பரோ?

ஆகவே, உழவனே இச்சந்தர்ப்பத்தை நழுவ விடாது உனக்குத் தேவையானவைகளை அவ்வப்பொழுது அரசாங்கத்திற் கறிவித்து தேவையைப்பெற்று, உழவைக்கொண்டு விளைவைப் பெருக்கி, கால்நடையைப் போற்றி களைப்பைஆற்றி உரத்தை ஊக்கி உடமையைத்தூக்கி, அறிவை வளர்த்து வயிறார உண்டு, மனிதனுக்கு மனிதன் என்ற முறையிலும், நம் நாட்டுப்பண்புப் படியும் நடைமுறையில் ஒழுகி, நாவலர், பாவலர் போற்ற, பிறப்பின் நலன்காண, தூங்காது, அயராது, சோம்பாது, சந்தோஷமாய் வாழ விழித்துக்கொள்வாய்.

உழவர் விழிப்பரோ?

(பேசு)

உழவனே விழித்தெழு! புதுமை புஷ்பிக்குங்காலம் நவீனம் நாடும் நாள். குதூகலம் குவியும் வேளை. புதிது புதிதாக, இதர நாடுகளுக்கொப்ப, நவீன முறைகளில் நலம்காண அரசாங்கம் உழைக்கின்றது. தூங்காதே.

விவசாய முறையைச் சீர்திருத்தவும், விவசாயியின் தேவைகளைப்பூர்த்தி செய்யவும், நமது அரசாங்கம் நவீனமும் சிக்கனமும் ஏற்படும்படியான கருவிகளையும், பாசன வசதியில்லாத இடங்களுக்கு அணைக்கட்டுகள், கால்வாத்துகள் முதலான திட்டங்களைத் தயாரித்து வருகிறது. பழையன கழிதலும் புதியன புகுதலும், என்பதற்கிணங்க அவசியமானவைகளை ஏற்றுக்கொள்ளும் காலமிது. இதுமட்டுமா, கூட்டுப்பண்ணை முறை எங்கெங்கு சாதகமோ அங்கெல்லாம் பண்ணை அமைக்கவும் தயங்காது. உனது ஊக்கமும் திடனும் உண்டாயின் உனது பெருமையை அளவிடக் கூடியவர் எத்தனையோபேர். புதியவழிகளில் உனக்கு வாய்க்கால் வகுக்குங்கால், உனக்குக்கிடைப்பதென்ன? உனக்கு உதவிவரும் கால்நடைச் செல்வம் கொழிக்கும், உரத்தைக் கொடுக்கும் கால்நடைகள் பெருகப்பெருக உணவு சக்தி அதிகரிக்கும. தொழில் வளம் பெருகும். தொழில் வளத்தால் மக்கள் சோம்பலினின்றும் விலகுவர். வேலையில்லாத்திண்டாட்டம் ஒழியும். குடிசைத் தொழில் விருத்தியாகும். தேவைக்கு அதிகமாகப் பொருள்கள் கிடைக்கும். அதனல் வாழ்க்கைத்தரம் குறையும். எளியவன் முதல் உயரியவன் ஈறாக யாவரும் ஒற்றுமையுடனும், சுகபோகமாக வாழவும் ஏற்படும். துட்டுக்கு எட்டுச் சட்டிவீதம் வாங்கி எட்டுத்துட்டுக்கு ஒரு சட்டியாக விற்றும் வட்டிக்குக் கட்டவில்லையே? எனக்கவலை கொள்ளும் ஷைலக் போன்ருரின் பிழைப்பிலும் மண்விழும். போதிய வருவாயின்றி உழைத்து உழைத்து உயிரைப போக்கினும், உழுதவனுக்கு உழக்குக்கூட மீதமில்லை

என்றபடி உனது சொற்ப வருவாயைக் களத்தடியிலேயே அளந்து கொடுத்துவிட்டு வரும் கவலை ஒழியும் தலைக்கோழிகூவியதும். குமரிஇருட்டு மறையுமுன்னே மண் வெட்டியைத்தோழிலே மாட்டிக்கொண்டு பூச்சிபொட்டைகள், முள் ஒன்றையும் பொருட்படுத்தாத ஒற்றையடிப்பாதை, வரப்புவழியேபோய் கழனியைத் திருத்தவும், உனக்காகக் கையளவு கஞ்சியைக் கலயத்திலேஊற்றி அதன் கழுத்திலே காரமான துவயலையும் வைத்து தலையிலே சுமந்துவந்து கொடுக்கும் இல்லாளின் முகத்தைப் பார்த்ததும் புன்முறுவல் கொண்டு கடும் உழைப்பையும் மறந்து அன்போடு அரைவயிற்றுக் கூழைக்குடித்து, பத்திரமாக வீடுபோகுமாறு உத்திரவிட்டுவிட்டு மறுபடியும் வேலை செய்கின்றாய். கதிரவன்சரியும் பொழுது வீடுவந்து, போதுமான வைத்திய, கல்வி வசதியின்றி சூப்பி எறிந்த பனங்கொட்டையைப் போலாக, தலையில் எண்ணெயின்றி வயிறு பெருத்து சோம்பிக்கிடக்கும் குழந்தைகளைக்கண்டு மனம் புழுங்கியகாலம் தொலையும் நாள் கிட்டிவருகிறது. கிராமச் சீர்திருத்தத்திலே ஆங்காங்கு வைத்தியசாலைகள், வீட்டுவசதிகள், குடிதண்ணீர்வசதிகள், போக்குவரவு வசதிகள், கல்விவசதிகள், குடிசைத்தொழில்கள் முதலியன கொடுக்கும்படியாகத்திட்டமிட்டிருக்கிறார்கள். கிராமவாசிகளை 'நாட்டுப் பொறத்தான்' என்று நகைக்காது அவனது க்ஷேமத்தையும் கவனிக்கும் காலம் வந்துவிட்டது. உனது மேன்மையை, விருத்தியை உழைப்பை அறிந்துதான் உனதுஉதவியை நாடுகிறது அரசாங்கம். நீவெகு நாளாய் பகற்கொள்ளையடிக்கப்பட்டுவந்த ஜமீன்தாரியும் ஒழிந்தது. தரிசு நிலங்களாகப் போட்டவர்களுக்கு அபராதம் விதிக்கும் காலம் தொலைவிலில்லை. உணவு உற்பத்திக்கு ஊதியம் (போனஸ்) கொடுக்கவும் முன்வந்திருக்கிறது.

இவ்வளவுக்கும் காரணபூதகன் யார்? உண்மையான உழைப்பாளியாம் விவசாயி அல்லவா! பூமாதேவியைக் கல்விக் கல்வி பொறுமையையே பூஷணமாகக்கொண் [illegible] ப்பாளியல்லவா! ஓதுவாரெல்லாம் உழுவார்தலைக்க [illegible] ன்ற வாக்குப் பொருத்தமல்லவா!

செ [illegible] க்கம்.

"திருக்குறளும் தமிழ் நாடும்."

(அ. கு. பூ.)

உலகம் அனைத்திற்கும் பொதுவான நூற்கள் ஒருசில, அவைகளில் மிகமிகச்சிறப்புற்றதும், தலைமையானதும் திருக்குறள் என்று அருதியிட்டு உறுதியாகக்கூறலாம். தமிழர்கள் தற்போது பலவகைகளில் தாழ்வுற்றிருப்பினும் இவர்களது பண்டைய நூற்கள் இவர்களுக்கு ஒரு வகையில் பெருமையையும், புகழையும் அளித்துவருகின்றன. பல நாடுகளிலும், பற்பல காலங்களிலும் தோன்றிய பன்மொழி தெரிந்த விற்பன்னர்கள் பலர் திருக்குறளுக்கு நிகரான நூலோ, அல்லது இதற்குமேம்மட்ட நூலோ இதுவரை என்னாட்டிலும், எம்மொழியிலும் தோன்றவில்லை என்பதை ஆராய்ச்சிமூலமாகவும், அனுபவபூர்வமாகவும் விளக்கிக் காட்டியுள்ளனர்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ்கொண்ட தமிழ் நாடு என்று பாரதியார், திருக்குறள் மூலமாகத் தமிழ் நாடு பெற்றுள்ள புகழை ஒருவாறு விளக்கியுள்ளார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன். தோன்றிய இந்நூலை சங்கப்பலத்திலிருந்தே நந்தமிழகத்தில் புலவர்கள் கல்விமான்கள், அறிஞர்கள் ஆகியபலரும், புகழ்ந்து பாராட்டி வந்திருக்கின்றனர் "மணிமேகலை" என்னும் அழகியதோர் அணிகலனைத் தமிழ்த் தாய்க்கு அணிவித்த சாத்தனார் என்னும் புலவர் பெருமணி, திருவள்ளுவரைக் குறிப்பிடுங்கால் பொய்யில் புலவர் என்று குறிப்பிடுகிறார். பண்டைப் புலவர்கள் பலர், திருவள்ளுவரைத் தெய்வப்புலவர் என்னும் அடைமொழி சேர்த்து தெய்வப் புலவர் திருவள்ளுவர் என அழைத்து வந்திருக்கின்றனர், அதனால் இவரது பெருமை ஒருவாறு விளங்கும். சங்ககாலம் முதற் கொண்டு இதுவரை திருவள்ளுவருக்குக் காணிக்கைச்செலுத்தாத தமிழ்ப்புலவர் எவரும் மிலர். ஆனால் பிறநாடுகளிலும் தோன்றிய ஒருசில நூற்கள் உலகில் பிரசித்தி பெற்றிருப்பதைபோன்று—

திருக்குறள் பிரசித்திபெற்றிருக்கவில்லை. இதற்குப்பலகாரணங்கள் கூறலாமெனினும் தமிழர்களாகிய நாம் இந்நூல் விஷயத்தில் போதியகவனம் செலுத்தவில்லை என்பதும் ஓர் காரணமாகும்.

தமிழர்களது பண்டைய பொக்கிஷங்களில் ஒன்றான திருக்குறள், அதைக் கையாள்பவர்களின் அறிவுக்கும், திறனுக்கும் தகுதிக்கும் ஏற்பப் பற்பலவகைகளில் காட்சியளிக்கின்றது. ஒருசிலர் இதை ஒப்பற்ற காவியம் என்று புகழ்கின்றனர்; சிலர் இது மக்கள் சமுதாயத்தின், அறநூல் என்று முடிவு கட்டுகின்றனர். ஒருசிலர் இது ஆட்சிநூல் என்கின்றனர்; சிலர் இது காம நூல் என்கின்றனர்; ஆனால், மேற்கண்டவர்கள் ஒவ்வொருவரின் கூற்றுக்கும். ஆதாரங்கள் பல இந்நூலில் அமைந்திருக்கின்றன.

இன்றைய இருபதாம் நூற்றாண்டில் ஆங்கில நாடகப் பேராசிரியரான ஷேக்ஸ்பியரது நாடகநூல் உலகத்தோர் புகழ்ந்து பேசும் சிறந்த நூல்களில் ஒன்றாகப்பாராட்டப்பட்டு வருகிறது. ஷேக்ஸ்பியர் நூலுக்கு முகவுரை எழுதிய டாக்டர் ஜான்சன், இந்நூல் உலகத்தை விளக்கிக்காட்டும் ஒருநிலைக்கண்ணாடி என்கிறார். ஷேக்ஸ்பியரது பெரு நூலுக்குப் பெருமை அளித்தவர்களில் முதன்மையானவர் டாக்டர் ஜான்சன் எனக்கூறலாம்.

ஷேக்ஸ்பியரது நாடகங்களும் மில்டனாது சுவர்க்கநூல்களும் காளிதாஸரது சாகுந்தலமும் சுவைமிகு நாடகங்களையும் கதைகளையும் தம்மகத்தேகொண்டு பெருநூல்களாக விளங்குகின்றன. ஆனால் திருக்குறளோ நாடகங்களையோ கதைகளையோ தன்னகத்தே கொண்டிருக்கவில்லை. எனினும் இந்நூல், மேற்சொன்ன எல்லா நூல்களுக்கும் மேம்பட்ட நூலாகவே விளங்கி வருகிறது. இதற்குக் காரணம் யாது? திருக்குறள் 2000 ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் தோன்றியதெனினும், அது நாடு மொழிசமயம் ஆகியவேறுபாடுகள் அனைத்தையும் கடந்து மக்கள் சமுதாயம் அனைத்திற்கும் உரிய பொதுநூலாக இருந்துவருகிறது. இதனால் இது அன்றிலிருந்து இன்றுவரை பொதுமறை எனப் புகழப்பட்டு வருகிறது.

பண்டைநாளிலிருந்து இன்றுவரை, உலகில் காலமாறுதலுக்கேற்ப பல மாறுபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. பண்டைக் காலத்தில் தோன்றிய பல நூல்கள், இன்றைய காலமாறுதலுக்கு' ஒவ்வாத வகையில் அழிந்தொழிந்தன ஆனால் திருக்குறளோ எத்தகையமாறுதலையும் வரவேற்று முக்காலத்திற்கும் பொருந்தும் நூலாகத் திகழ்கிறது.

ஒருகாலத்தில் உலகில் மன்னர் ஆட்சி வலுப்பெற்றிருந்தது தற்போது மக்கள் ஆட்சி உரம்பெற்று வருகிறது. மன்னர் ஆட்சி காலத்தில் பாராட்டப்பட்ட நூல் மக்கள் ஆட்சி காலத்திலும் அதிகமாகப் புகழ்ந்து பாராட்டப்படுவது பெரும் வியப்பன்றோ? இதற்குக்காரணம் இந்நூலில் அடங்கியுள்ள அறிய கருத்துக்களே யாகும. இக்கருத்துக்களும், இறவாத புகழுடைய கருத்துக்களாகவிருந்து, காலத்திற்கேற்றமுறையில் வளைந்து கொடுத்து வாழ்கின்றன.

• •

சமீபத்தில் உலகில் தோன்றிய பெரியார்களில் குறிப்பிடத்தக்கவர்கள் இருவர்: ஒருவர் கார்ல்மார்க்கஸ்; மற்றொருவர் மகாத்மாகாந்தி முன்னவர் உலகில்தோன்றிய சிந்தனையாளர்களில் தலைசிறந்தவர்; ஆத்மீகபோதத்தை மக்கள் குலத்திற்கு ஊட்ட வந்த ஆத்மிகஞானி இன்றைய உலகில் மக்கள் சமுதாயத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களையும் இவ்விரு பெரியார்களது கொள்கைகளையும் பின்பற்றி வருகின்றனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தோன்றிய திருவள்ளுவர் தமது அறிய நூலில் இவ்விருபெரியார்களது கொள்கைகளுக்கு ஆதரவு நல்கியிருக்கிறார் எனில், இந்நூலை நாம் எம்முறையில் பாராட்டவேண்டும்?

'வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வனுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்.'

எனும் திருக்குறள் அடிக்கு உவமையாக நின்றவர் காந்தியடிகள் ஆவர்; இந்தியாவிலே பிறந்து ஆத்மீகவாழ்க்கையை மேற்கொண்ட காந்தியடிகளின் கொள்கைகளுக்குப்பல உதாரணங்கள்

திருக்குறளில் காட்டலாமெனினும் ஜெர்மனியில் தோன்றிய கார்ல்மார்க்ஸின் சமதர்மக்கொள்கைக்குத் திருக்குறளில் உதாரணம் உண்டோ என்று சிலர் வினவக்கூடும்.

"ஊருணிநீர் நிறைந்தற்றே உலகவாம்பேரறிவாளன் திரு" எனும் குறள் பண்டைக்காலத்திய உயரிய சமதர்ம நெறியை போதிக்கிறது ஊரிலுள்ளார் அனைவரும் தங்குதடையின்றி அருந்துவதற்கேற்ற முறையில், ஊரின் நடுவே அமைந்திருக்கும் குளத்தைப்போன்றது பெரிய அறிவாளர்களது செல்வம்; என்பது மேற்கண்ட குறளின் கருத்து. இதுவன்றோ உயரிய ஆத்மீகச் சமதர்மநெறி வேண்டுவதில்லையன்றோ? மக்கள் இத்தகைய நெறியை அனுட்டிக்காமலேயேதான் உலகில் பல பாகங்களிலும் இன்று பலாத்காரம், தலைவிரித்தாடுகிறது. மக்கள் சமுதாயத்தை உய்விக்கத்தோன்றிய பெரிய மகான்களில் தலைசிறந்தவர் திருவள்ளுவர்; அவர் பல மதஸ்தாபகர்களைப்போன்று தாம் சொல்வதைதான் மக்கள் பின்பற்றவேண்டும் என்று வற்புறுத்தவுமில்லை.

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும், அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு.

என்று கூறியுள்ளார்.

காந்தியக்கொள்கைகளையும், கார்ல்மார்க்ஸின் சித்தாந்தங்களையும் ஒன்றாக இணைத்துக் காட்டுபவர் திருவள்ளுவர்; அறிவுத்துறையை நோக்கி ஓடி விரைந்துகொண்டிருக்கும் உண்மையான வழியைக்காட்டும் சிறந்த நூல் திருக்குறள். இத்தகைய நூல் தமிழ் மொழியில் தோன்றியிருப்பதைக் கொண்டு ஒவ்வொரு தமிழனும் பெருமையுறுத்தல் வேண்டும்; பெருமையுற்றால் மாத்திரம் போதுமா? உலகமெலாம் தமிழ்முழக்கமும், திருக்குறள் முழக்கமும் செய்தல்வேண்டும்; அது தமிழன் கடமை; தமிழர்கள் தங்கள் கடமையைச் செம்மையுறச் செய்தல்வேண்டும். வாழ்க தமிழ் மொழி! வாழ்க திருக்குறள்!! வாழ்க தமிழ்நாடு!!!

உழவர் பெருமக்களுக்கு............

[கல்லூரணி வீ. அருணசலம்.]

உழவர் பெருமக்களே! உழைப்பின் பயன் அறியா மக்களே!! உழைத்து உழைத்து உடல் நலங்குன்றிய உழவர் மக்களே!!! பாடுபட்டும் அதன் பயனை அனுபவிக்க முடியாத பாட்டாளி மக்களே!!!! பாழும் உங்கள் நிலைமையைக்கண்டு, பரிதவிக்கும் உங்கள் பரிதாப நிலையைக்கண்டு பரிவு காட்டுவதே யன்றி வேறென்ன இருக்கின்றது.

உங்களின் பரிதாப நிலைக்குக் காரணம் என்ன என்பதை என்ருவது நீங்கள் ஊன்றிப்பார்த்திருக்கின்றீர்களா? அல்லது பார்க்கின்றீர்களா? பார்க்கப்போகின்றீர்களா? !! காரணம் என்ன? ஒழுங்கீனம், கட்டுப்பாடின்மை முற்போக் கின்மை, அறியாமையன்றே! உங்களில் எத்தனைபேர் கல்வி கற்றிருக்கின்றீர்கள்? சுமார் நூற்றுக்கு ஐந்து சதவீதம் கூட இருக்காதே! எத்தனைபேர் முற்போக்கான நோக்குடையவர்களாக இருக்கின்றீர்கள்? அதில் அநேகமாகப் பூஜ்யமாகத்தானே இருக்கும். படிப்பின் பயனே உங்களுக்குப் புரியவில்லையே! பாட்டாளிக்குப் படிப்பெதற்கு என்ரு எண்ணுகின்றீர்கள்? அப்படி நினைத்தால் அது மிகவும் தவறு.

ஏர் உழுபவர்கள் படிக்கக்கூடாதா? படித்தவர்கள் ஏர் உழுகக்கூடாதா? இந்த அடிமைப் புத்திதானே உங்களைப்பாழும் படுகுழியில் தள்ளிவிட்டது. "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர் பழுதுண்டு வேரோர் பணிக்கு" என்ற வாசகத்தை உணரும் நாளே உங்கள் வாழ்க்கைக்கு உய்வுநாள்.

படித்தவர்கள் செய்யும் வியாபாரத்திற்கும், படியாத வர்கள் செய்யும் வியாபாரத்திற்கும் வியாபார நுட்பத்தில், தந்திரத்தில் வித்தியாசம் மிகுதியாகக் காணப்படுவது போல, ஏர் உழும் விதத்திலும், நுட்பத்திலும், தந்திரத்திலும் இருபாலருக்கும் வித்தியாசம் மிகுதியாகவேதான் காணப்படுகின்றது.

படித்தவன் நவீன உழவுக் கருவிகளை உபயோகப்படுத்து கின்றான். படியாதவனோ முன்னோர்கள் கடைப்பிடித்துவந்த கலப் பையையும், ஏர்களையும் வைத்துக்கொண்டே உழுகின்றான். முடி வில் பலனின் படித்தவனில் பாதிகூடப் படியாதவனுக்குக்கிட்ட வில்லை. ஆகவே முதன் முதலில் படிப்பில் நாட்டத்தைச் செலுத்திப் பின் உழவில் செலுத்தி நாட்டைச் செழிக்கச் செய்யுங்கள்.

அடுத்தபடியாகப் பாழும் பஞ்சாங்கத்தையும், ஜோசிய ஏடுகளையும் தீயிட்டுக்கொழுத்துங்கள். மழை எப்போது பெய்யும், காற்று எப்போது அடிக்கும், என்பன போன்ற கால நிலையைக் கவனிக்கப் பஞ்சாங்கத்தைப் புரட்டாதீர்கள். பஞ்சாங்கம் பார்ப் பதற்குப்பதிலாக செய்தித்தாளில் காலநிலை என்ற தலைப்பின் கீழ் உள்ள பகுதியையும், பூமி வர்ணனை நூலையும் ஊன்றி வாசியுங்கள் காலநிலையைக் கவனித்துப் பயிர்செய்தால் பலன் நிச்சயம். பாழும் பஞ்சாங்கத்தை நம்பி, நம்பி பஞ்சத்தில் சிக்குண்டு பாதவிப்பது போதும். இதுபோதும்.

நிலங்களைக் கவனிக்கும் போது நம் நிலைமை மிகவும் பரிதா பகரமான நிலையில் இருக்கின்றது. ஒரு தகப்பனுக்கு ஒரு ஏக்கர் நிலம் இருக்கும் அவனுக்கு நான்கு குமாரர்கள் இருப்பார்கள். உடன் பிறந்த சகோதரர்கள்கூட மனதோடு அந்த ஒரு ஏக்கரை ஒருவருக்கே விடடுக்கொடுக்க மாட்டார்கள். மூதாதையர் சொத்து என்பதாகக்கூறி தலைக்குக் கால் ஏக்கராகப் பகிர்ந்து கொண்டு, அதற்கு வாய்க்கால்களும், வரப்புகளும், வேலிகளையும் ஏற்படுத்திக்கொள்வார்கள். இந்த வாய்க்கால்களும், வரப்புகளும், வேலிகளும் கால் குறுக்கத்தை அடைத்துக்கொள்ளும் பின் விவ சாயம் செய்வது எவ்விடத்தில், சிந்தியுங்கள். வெவ்வேறு இடங் களில் நிலம் கொஞ்சம் கொஞ்சமாக இருப்பதைக் காட்டிலும், அதே அளவு நிலம் ஒரே இடத்தில் இருப்பதே மேல். ஒருவருக்கு ஒரே இடத்தில் ஐந்து ஏக்கருக்குக் குறைவாக இருந்தால், பக்கத் தில் உள்ளவர்கள் சகிப்புத்தன்மையோடு அவருக்கு விட்டுக் விட்டு, அந்த ஈவுக்கு அடுத்த இடத்தில் நிலத்தை வாங்கிக் கொண்

ஐக்கியத் தொழிலாளர் சங்கம்,
பாலேயம்பட்டி.

ஷை சங்கத்தின் 4-வது ஆண்டு நிறைவு விழா 11-9-49ல நேரு மைதானத்தில், பாலேயம்பட்டி பஞ்சாயத்து போர்டு ஆபீஸர் திரு N. மாசிலாமணி B. A., அவர்கள் தலைமையில் நடந்தேறியது. அவ்வமயம் நமது ஆசிரியர் திரு N. S அழகர்சாமி ஜாதி, மத, கட்சி வேறுபாடின்றி தொழிலாளர்கள் யாவரும் ஒற்றுமையாக இருந்து, தங்கள் குறைகளை சட்டரீதியாக இருந்து தீர்த்துக் கொள்ளப் பாடுபடவேண்டுமென்றும், நேர்மையுள்ள நேரு சர்க்காரை ஆதரிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

மற்றும் அச்சுதன், வெங்கிடசாமி, சிங்கமரெட்டியார் முதலியவர்கள் சொற்பொழிவாற்றி, வந்தனோபசாரத்துடன் விழா இனிது முடிந்தது. கூட்டத்திற்கு ஒலிபெருக்கியும் வைக்கப்பட்டிருந்தது.

12-ம் பக்கத் தொடர்ச்சி....

டால், விவசாயத்திற்கு மிகவும் எளிதாக இருக்கும். பராமரிப்பும் எளிதாகும். மண் ஆசையும் குடியானவர்களுக்கு மட்டற்றதாக இருக்கின்றது. ஓரடி நிலத்திற்கு ஒப்பற்ற உயிரைக் கொடுக்கவும் தயாராக இருக்கின்றார்கள். அதற்கு எவ்வளவு செலவழிக்கவும் தயங்கமாட்டார்கள். நீதிஸ்தலத்திற்குச் செல்ல அவர்கள் கால்கள் கொஞ்சமேனும் பின்வாங்க மாட்டது. தமிழன் போர் முனைக்குச் சென்றால் முன்வைத்த காலை பின் எடுக்காதது போலவே அவர்களும் நீதிஸ்தலத்திற்குச் செல்லுங்கால் முன்வைத்த காலை பின் வைக்காமல் அஞ்சா நெஞ்சுடன் சென்று, உள்ளதையும் தொலைத்து ஓட்டாண்டியாகின்றார்கள்.

இராமநாதபுரம் ஜில்லா

உணவு உற்பத்தியாளர் மகாநாடு.

விருதுநகர் 24-9-49.

ஷை மகாநாடு விருதுநகர் சியூழுத்து டாக்கீஸில் 24-9-49 சனிக்கிழமை காலை 10-மணிக்கு, சென்னை மாகாண மாஜி முதல், மந்திரி ஓமந்தூர் திரு பி. ராமசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் மிகவிமரிசையாக நடைபெற்றது. அவ்வமயம் திரு. ரெட்டியார் அவர்கள், விவசாய மக்கள் கால்நடைகளை செம்மையாக கவனிக்க வேண்டுமென்றும், உரத்தைசேகரிப்பதில் அக்கரைகாட்டவேண்டு மென்றும், உணவு உற்பத்தி செய்வதில் மிகுந்த சிரத்தை காட்டுவதுடன், சர்க்காரோ, உத்தியோகஸ்தர்களோ, தப்பு செய்தால் அதை ஸ்தாபன ரீதியாக கண்டித்து, அவர்களை திருத்தவேண்டு மென்றும், ஒவ்வொரு ஊரிலும் விவசாய சங்கங்கள் கட்டாயம் எற்படுத்த வேண்டுமென்றும், இன்னும், இன்றைய விவசாய மக்களின் பரிதாப நிலைமையை படம்பிடித்துக் காட்டுவனபோல், அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் பேசினர்.

விவசாய மக்கள் முன்னேற்றத்திற்கான ப[illegible]தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இம் மகாநாட்டிற்கு திரு S. ஜெயராம் ரெட்டியார் B. A , M. L. C. அவர்கள் வரவேற்புக் கமிட்டித்தலைவராகவும், திரு V. V. ராமசாமி நாடார் அவர்கள் செயலாளராகவும் அமைந்திருந்தார்கள். மகாநாட்டிற்கு கீழ்கண்ட முக்கியஸ்தர்கள் விஜயம்செய்திருந்தார்கள். ரா. கிருஷ்ணசாமி நாயடு, S. ராமசாமி நாயுடு, பண்ணையார் ராமசுந்தரம் பிள்ளை, ஜில்லா கலெக்டர் உத்தண்ட ராமபிள்ளை, V. V. சண்முக நாடார், S. S. சங்கம ரெட்டியார், அங்கிடி செட்டியார், A. V. திருப்பதி ரெட்டியார், நமது ஆசிரியர் N. S. அழகர்சாமி, பெ. சி. சிதம்பர நாடார், சங்கரபபண்டிய நாடார் ஆகியவர்களாவார்கள். பகல் 2-மணிக்கு திருV.V.R. அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு, மகாநாடு இனிது முடிந்தது.

அன்று மாலை 6-மணிக்கு 'விருதை தமிழ் கழக ஆண்டு விழா' நமது ரெட்டியார் அவர்கள் தலைமையில் மிக மிகச்சிறப்பாக நடைபெற்றது. திருவாளர்கள் R. P. சேதுப்பிள்ளை, T. S. கந்தசாமி முதலியார் முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

'உழவனைப் பாரீர்.'

(P. சீனிச்சாமி)

1. உழைப்பைக் கொடுத்தும் உரிமை இல்லாது
ஓய்ந்த மாடுகள் தேய்ந்த கலப்பையுடன்
சுரண்டலுக்காளாகி உண்ண உணவின்றி
சுதந்திர உழவன் வாழ்வதைப் பாரீர்.

2. காயும் வெயிலையும் பால் நிலாவெனக் கருதி
காலமெல்லாம் காட்டினில் பாடுபட்டும்
கால்வயிற்றுக் கஞ்சிக்கும் வகையின்றிக்
காசினியில் உழவன் உழல்வதைப் பாரீர்.

3. கூலி அற்றவனாய் கவலை உற்றவனாய்
கந்தலை உடுத்தி வியர்வையைச் சிந்தியும்
கடும்பனி, வெயில் மழையிலும் உழைத்துக்
கஷ்டப் பாடுபடும் உழவனைப் பாரீர்.

4. உழவனின் வாழ்வு வளம்பெற்றிடவே
உழைப்பவன் ஊதியம் பெற்று வாழவே
பண்ணையர் இனம் ஜமீன்கள் மாயவே
பாஸ்கான காந்திய வாழ்வை உருவாக்கே.

5. உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனம் செய்திட
உண்டு களிப்போனை நிந்தனை செய்திட
கூட்டுப்பண்ணை, குடிசைத் தொழிலை வளர்த்திட
கருத்துடன் "உழவர் நாடு" சஞ்சிகை பாரீர்.

சென்ற மாத தொடர்.......

★ யார் மனிதன்? ★

மனிதன் குணம் புத்தகப்படிப்பு பூமியாராய்ச்சி
(P. ராமசாமி)

இன்றைய மனிதன் தொழில் என்ன? சற்று சென்ற காலத்தைச்சிந்திப்போம்! நடந்த நடப்புத்தான். கேவலம் பட்டம் பதவி, பேர், புகழ்பெற ஊருக்கொரு அலங்கார உடையுடுத்தும் திருடன் (அரசன்) என்ன செய்தார்கள். இரண்டாம் உலகத்தை மூட்டிவிட்ட ஹிட்லர், அவனை முறியடித்த ஸ்டாலின், தன்தேச நன்மைக்கு பிறிதொரு தேசத்தின் பொருளையும் உயிரையும் பறித்த உலுத்தன் சர்ச்சில். சிறகுகட்டி பறந்தேனும் சிறப்படைய வேண்டுமென்றெண்ணிய டோஜோ. இவர்கள் மனிதர்கள்தானா? இவர்கள் மனிதர்களானால் இவர்கள் தொழில்தான் மனிதர்களுக்கா? அப்படியானால் தொழிலுக்குஇடம், குறி.

ஹிரோஷிமாநகரில் அணுகுண்டு பரீக்ஷை செய்தார்களே அது மனிதர் செயலா?

வங்கத்திலே, கங்கைநதி கரை புரண்டோடியும், தங்கம் போன்று விளைந்த கோதுமை மங்கி மறைந்து மக்கள் பங்கப் பட்டார்களே இது மனிதர் செயலா?

உலகெலாம் நடந்த யுத்தத்தில் 22 லக்ஷம் மக்கள் சாக, இந்தியாவில் மட்டும் உணவில்லாப் பஞ்சம் உண்டாக்கி 40 லக்ஷத்தை நமனுக்கிரை கொடுத்தது மனிதர் செயலா?

மனிதர் செயலா? என்று நாம் வியாசமாய் வைத்துக் கொண்டு ஆஸ்திகம் பேசும் அறிவாளிகள், நாஸ்திகனாய் இருந்த இவன் நாராயணனை எண்ணுகிறான் என்று கோரணி செய்ய எண்ணுகிறார்கள். சற்று கீழே இறங்கி ஆராயட்டும். இன்றைய இருகால் உருவில் இருமாந்து திரிபவர் மனிதகுணமுடையவரல்ல என்று கூறுகிறேன்.

அளப்பறிய, ஆண்டவன் போல் அக்கிரமங்கள் செய்து விட்டு அவைகளை மூடி முத்திரையிட்டு முனிவர்போல் வேடமிட்ட முழுமனிதர்கள்?

← மனிதன் →

அனுதையை அக்கிரமம் செய்பவன் மனிதன் பிழைக்க வழியற்றவனை பீடையுடையோனுக்குபவன் மனிதன். எச்சில் தொட்டியிலே நச்சு நச்செசன கொச்சு நாயோடு போராடி பொழைப்பை நடத்துகிறுனே! அவன்?

உழைத்தும் உணவின்றிமடிய, உடம்பின் அலங்காரங் களுக்கு உடைமை (நகை) களை அணிந்துள்ள சிங்காரச்சீமான்?

இரும்புப் பெட்டியிலே, கரும்பினுமினிய உழைப்பின் பலனை பறித்து. துரும்பேற பூட்டிவைத்துள்ளானே! அவன்.

இவ்வளவு குண நலன்கள் நிறைந்த மனித சமுதாயம் சமைத்திருப்பது அரசு. இந்த அரசு மக்களுக்கெல்லாம் இன்பபுரி யாகுமா? துன்பக்கேணியாகுமா?

← பலதிற மனிதன் →

1 காயமே இது பொய்யடா
காற்றடைத்த பையடா? இதுவும் மனித சித்தாந்தம்

2 தனந்தேடி உண்ணுமல் புதைக்கவேண்டாம். இதுவும் மனித தர்மத்திலிருந்து வழிந்த அடுக்கு

3 அறஞ்செய விரும்பு. இதுவும் அருள் மனிதன் வாக்கு

4 தேடாதழிக்கின் பாடாய் முடியும்
குந்தித்தின்றுல் குன்றும் குறையும் } இதுவும் மனிவாக்கு

இருக்கும் வரையும் இரண்டு கோயிலைக்கட்டி இரண்டுபூஜை களைச் செய்தால் மோக்ஷம்.

பூஜை, பூஜை, கேவலம் கற்கள் போரால் கள்ளர்கள் வாழ்வா? முடியாது. ஒரு ஆராய்ச்சிக்கூடம் கட்டி ஆயிரம் பேரை முன்னேற்றுவேன்.

எதோ நாட்டிலே உணவுத்தட்டு உருக்குலைக்கிறது. ஒரு சத்திரம் கட்டி அந்தி சந்தி 50பேருக்கு சாப்பாடு போடுவேன்.

ஒரு தொழிற்சாலை கட்டி எதோ ஆயிரம் பேருக்கு உழைப்பைக் கொடுப்பேன்.

இப்படி பலதிறப்பட்ட எண்ணங்கள் உருக்கொண்ட இந்த உலகம் எப்படி திறம்படும்? மனிதன் மனிதனைகமதிக்க படுவானு? மனிதன் என் உருவெடுத்தான்? மனிதன் யார்? இவற்றைச்சற்று ஆராய்வோம்.

சீனுதேசத்தின் யாங்ஸிநதிப்பள்ளத்தாக்கில் அதோ கியாங் என்ற அந்த சீனக்குடியானவன், தன் காதலியுடன் ஏர் பிடித்து அவன் அடையும் ஆனந்தம் இதுதான் மனித இன்பம்.

(தொடரும்)

மேதாவிகளின் மேதை

உண்டு, உடுத்தி, குடித்து, களித்து சில ஆண்டுகள் உயிர் வாழ்வதைவிட தாய்நாட்டிற்காக இன்றே இறப்பது சிறந்தது. —நெப்போலியன்.

எந்தப் பாவத்தைத் தடுக்கவேண்டியது அவசியமோ, அந்தப் பாவத்துடன் ஒத்துழைக்க மறுப்பதுதான் ஒத்துழையாமை. —ஸ்டோஸ்க்.

கெட்ட சட்டங்கள் செய்யப்படுவதைத் தடுத்து நல்ல சட்டங்கள் செய்வதற்குத்தான் சட்டசபை வேண்டும். —மகாத்மா காந்தி.

திருவிதவாங்கூர் ரெட்டியார் ஐக்ய சங்கம்,

கொல்லம். 24-9-'49.

சென்ற 18-9-49 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல், திருவிதாங்கூர் ரெட்டியார் ஐக்கிய சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் ஒன்று உயர் திரு N. A. நாராயணசுவாமி ரெட்டியாரவர்கள் தலைமையில், கொல்லம், சங்கக்காரியாலயத்தில் வைத்து நடந்தது.

கூட்டத்திற்கு உபதலைவர் திரு K. V. கோண்டாரெட்டியார் திருவனந்தபுரம், வழக்கறிஞர் திரு N. பாலகிருஷ்ண ரெட்டியார், B. A., B. L., V. V. பிரஸ் மானேஜிங் பார்ட்னர். திரு M பால கிருஷ்ண ரெட்டியார், திரு S. முத்துசுவாமி ரெட்டியார், திரு P. கோபால ரெட்டியார், திரு K. இராமசுவாமி ரெட்டியார், திரு K. ஸ்ரீனிவாஸ ரெட்டியார், கூட்டுக் காரியதரிசி S. கோலப்ப ரெட்டியார் முதலிய பிரமுகர்களும் வந்திருந்தனர்.

முன்கூட்ட நடபடிக்கைகள் வாசித்து அங்கீகரிக்கப்பட்ட பின்னர், "உழவர் நாடு" பத்திராதிபரின் கடிதம் கவனிக்கப் பட்டது. அவர்களுக்கு சங்க அங்கத்தினர்களின் பெயர் விபரங்களடங்கிய ஜாபிதா ஒன்று அனுப்புவதென்று தீர்மானிக்கப் பட்டது.

நாகர்கோவில் திரு S. S. சுப்பையா ரெட்டியாரவர்களின் வேண்டுகோளுக் கிணங்க, அவர்களது மூத்த பையன், திரு S. குமாரசுவாமியின் படிப்பிற்கு, இவ்வருடத்திற்கு பிரதிமாத பள்ளிச் சம்பளம் அனுமதிக்கப்பட்டது.

திரு K. இராமராஜ் அவர்களின் மறைவினால் ஏற்பட்ட காலிஸ்தானத்திற்கு, கொல்லம், மளிகை வியாபாரம் திரு R. பொன்னரங்க ரெட்டியாரின் நியமனம் அங்கீகரிக்கப்பட்டது.

தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களுக்கு வாராத நான்கு நிர்வாக சபையினரின் பதவிகள் மீண்டும் புதிப்பிக்கப்பட்டது. சங்கத்தின் சாதாரணச் செலவுகள் அங்கீகாரமான தோடு இதர தீர்மானங்களும் நிறைவேற, கூட்டம் இனிது முடிந்தது.

ரெட்டிகுல மக்களுக்கோர் வேண்டுகோள்.

குலாபிமானிகளே!

முத்துராமலிங்கபுரம் ஆசிரியர், திரு **N. S. அழகர்சாமி அவர்கள்** ஓர் சமூகசீர் திருத்த வாதி, சென்ற பத்து ஆண்டு களாக நம்மக்களிடம் நெருங்கிப்பழகி அவர்களிடையேகல்வியைப் பரப்ப, பிரசாரத்தின் மூலம் பெரிதும் உழைத்து வருகிறார். கள்ளிக்குடி ரெட்டி மகாஜன சங்கத்திற்கு இரண்டாம் தடவை யாக, காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்லதோர் சமூக சேவை செய்து வருகிறார்.

அன்னார் இப்பொழுது **"உழவர் நாடு"** என்ற ஓர் மாதாந்திரப் பத்திரிகையை ஆரம்பித்து, நம் சமூக மக்களின் விவசாயம், அரசியல், பொருளாதாரம், கல்வி முன்னேற்றத்திற்காகப் பாடுபட ஆசைப்படுகிறார். ஆகவே நம்குல தனவந்தர்களும், மற்ற வர்களும் ஷெ பத்திரிகைக்கு போஷகர்களாகவும், சந்தாதார் களாகவும் ஆயிரக்கணக்கில் சேர்ந்து, அன்னாரை மேன்மேலும் சமூகசேவையில் ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(கையொப்பம்)

S. ஜெயராம் ரெட்டியார் B. A; M. L. C. விருதுநகர்.
N. சங்கரலிங்க ரெட்டியார் B. A. B. L. கோவில்பட்டி.
P. ரெங்கசாமி ரெட்டியார் B. A. B. L. துரையூர்.

சந்தாவிகிதம்.

ராஜா போஷகர்	ரூ	100
போஷகர்	ரூ	50
விஷேச ஆதரவாளர்	ரூ	25
ஆதரவாளர்	ரூ	10
ஸ்பெஷல் சந்தாதார்	ரூ	5
சந்தாதார்	ரூ	2

விலாசம்:- **N. S. அழகர்சாமி,**
ஆசிரியர் 'உழவர் நாடு'
முத்துராமலிங்கபுரம்.
(Via) அருப்புக்கோட்டை.

"உழவர் நாடு"

(மாதப் பத்திரிகை)

வருஷ சந்தா விகிதம்.

ராஜ போஷகர்	ரூ	100
போஷகர்	ரூ	50
விஷேச ஆதரவாளர்	ரூ	25
ஆதரவாளர்	ரூ	10
ஸ்பெஷல் சந்தா	ரூ	5
சாதாரணச் சந்தா	ரூ	2
தனி இதழ்		0—2—0

"வியாபாரத்திற்கழகு விளம்பரப்படுத்துதல்"

விளம்பர விகிதம்.

அட்டை வெளிப்புறம்	ரூ	50
,, உட்புறம்	ரூ	30
உள் ஒரு பக்கம்	ரூ	25
½ பக்கம்	ரூ	15

நீடித்த விளம்பரத்திற்கு எழுதியறிக
மாதிரிப்பிரதிக்கு 3 அணு ஸ்டாம்பு அனுப்புக.

'உழவர் நாடு' காரியாலயம்.
முத்துராமலிங்கபுரம்,
கல்லூரணி P. O. (Via) அருப்புக்கோட்டை.

ஸ்ரீ சக்தி பிரஸ், அருப்புக்கோட்டை 49